## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1131/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.1
(Defence
(Court

| Name | அஜித்குமார் | -- | |
|---|---|---|---|
| Father's Name | கணேசன் | Calling | உதவி இயக்குநர்- தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் |
| Village | காரைக்குடி | Religion | இந்து |
| Taluk | காரைக்குடி | Age | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 22nd day of April 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகாசி, உதவி இயக்குநர் –III, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையில் பணியாற்றி வருகிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம் 8 ம் தேதி காலை சுமார் 10.30 –11.00 மணியளவில் தீ விபத்து குறித்து குழு ஆய்வு சென்றபோது குழு துணை இயக்குநர்–I திருமதி தீபா மற்றும் உதவி இயக்குநர்– I திரு.இசக்கிராஜா அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். விபத்து நடந்த தொழிற்சாலையை ஆய்வு செய்தோம். அப்போது தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே சுமார் ஒன்றரை கி.மீ தொலைவிலுள்ள ஒரு சுடுகாட்டு பள்ளத்தில் பட்டாசு கடையுடன் எரிக்கப்பட்டது ஆய்வின்போது தெரியவந்தது. பின்னர் தொழிற்சாலையை முழுவதுமாக ஆய்வு செய்து விபத்து நடந்த அன்று பணி செய்த வீர அஜித், கணக்காளர் என்பவரை விசாரணை செய்து நடந்த விபரத்தை கேட்டு அறிந்து அவரிடம் வாக்குமூலம் பெற்று பிறகு காயமடைந்த திரு.முத்துகிருஷ்ணன் என்பவரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்துவிட்டு அவரிடம் வாக்குமூலம் பெற்று மேலும் விபத்து நடந்தபோது அவருடன் இருந்த அசோக்குமார் என்பவரது வாக்குமூலத்தையும் பெற்றோம். பின்னர் 11.08.2024 அன்று காயமடைந்த முத்துகிருஷ்ணன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த விபரம் தொலைபேசி மூலம் தெரியவந்தது. மேலும் அத்தொழிற்சாலையில் உரிமையாளர் மற்றும் மேலாளர் ஆகிய திரு.மாரிஸ்வரன் என்பவர் மீது காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டு திருவில்லிபுத்தூர் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 06.09.2024 தேதியில் நான் எதிரிக்கு அனுப்பிய **காரணம் கோரும் அறிவிப்பு அசாஆ 1** ஆகும். எதிரி அதனை பெற்றுக்கொண்டதற்கான **ஒப்புதல் அட்டை அசாஆ 2** ஆகும். கடந்த 09.10.2024 தேதியில் எதிரி எனது அலுவலகத்திற்கு அனுப்பிய **பதில் அறிவிப்பு அசாஆ 3** ஆகும். கடந்த 14.10.2024

தேதியில் நான் எதிரிக்கு அனுப்பிய மேல் **நடவடிக்கை தொடர்பான அறிவிப்பு அசாஆ 4** ஆகும். கடந்த 14.10.2024 தேதியில் நான் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநருக்கு அனுப்பிய **விரிவான புலனாய்வு அறிக்கை அசாஆ 5** ஆகும். கடந்த 08.08.2024 தேதியில் வீர அஜித் மற்றும் அசோக்குமார் ஆகியோர் கொடுத்த **வாக்குமூலங்கள் அசாஆ 6** ஆகும். விபத்து நடந்த இடத்தை காட்டக்கூடிய **புகைப்படங்கள் அசாஆ 7** ஆகும். எதிரி தொழிற்சாலையின் சார்பாக பெயர் குறிப்பிடப்படாத தனிநபர் **காப்பீட்டு சான்றிதழ் அசாஆ 8** ஆகும். சிவகாசி, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், துணை இயக்குநர் அவர்கள் எதிரி மீது வழக்கு தொடர **முன்மொழிவு பேராணை அசாஆ 9** ஆகும். எதிரி மீது வழக்கு தொடர சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், இயக்குநர் அவர்கள் வழங்கிய **அனுமதி குறிப்பாணை அசாஆ 10** ஆகும்.

குறுக்கு விசாரணை இல்லை.
மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 22nd day of April 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**